தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அரசினர் தீர்மானம்.

விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

6. 1987–88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1987–88 ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 252.42 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இப்போது வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு வருவாய்க் கணக்கின்கீழ் ரூ. 225.03 கோடி நிதி ஒதுக்கத்திற்கும், மூலதன, கடன் கணக்குகளின்கீழ் ரூ. 27.39 கோடி நிதி ஒதுக்கத்திற்கும் வகை செய்கிறது.

2. 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்கையில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்துக்கும் போதிய நிதி ஒதுக்கம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. எனினும், மிக வேகமாக மாறி வருகின்ற ஒரு நிலைமையில், அதாவது புதிய வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக வரவு செலவுத் திட்டத்திற்குப் பிந்திய அனுமதிகள் சில அவசியமாகின்றன. மேலும், மாநிலத்தில் நிலவுகின்ற கடுமையான வறட்சியின் காரணமாகப் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தவிரவும்